**கல்வி அமைச்சு**

# நாடு முழுவதிலும் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாகக் காணப்படும் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தர அதிபர் பதவிகளை நிரப்புதல் - 2023

இத்துடன் காணப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் அதிபர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழு உத்தரவின்படி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தரங்களில் தகைமைப்பெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. தகைமைகள்

i. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தர உத்தியோகத்தராக இருத்தல்

**குறிப்பு1**: விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி தினத்திற்கு முன்னர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின 1 ஆம் தர பதவியுயர்வை பெறுவதற்கு தகைமை பெற்ற உத்தியோகத்தர்கள் மாத்திரம் இந்த வெற்றிடங்களை கோரலாம் என்பதுடன், குறிப்பிட்ட பதவியுயர்வை பெறுவதற்கு தகைமையற்றோர்களினால் முன்வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (நேர்முகத்தேர்வின் போது 1 ஆம் தரத்திறந்கு பதவியுயர்வு பெற்ற கடிதத்தை முன்னிலைப்படுத்த வேண்டும்)

ii. அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது கல்விச் சேவைகள் குழுவினால், தேசிய பாடசாலை அதிபர்களாக நியமிப்பதற்கு பொருத்தமானவர்கள் அல்ல என அறிவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிக்க முடியாது

iii. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி தினத்தன்று 58 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். (தற்போது ஏதேனும் ஒரு தேசிய பாடசாலையில் அதிபர் பதவியின் வேலைகளை பார்ப்பதற்கு/பணிகளை நிறைவேற்றுவதற்கு/ கடமைகளை தழுவுவதற்கு முறையாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அந்த அதிபர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு இந்த வயதெல்லை உரித்தாகாது)

## 02. நிபந்தனைகள்

i. இம்முறை வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது உரிய அதிபர் பதவிக்காக நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அப்பதவியில் குறைந்தபட்சம் 3 வருடமாவது சேவைபுரிய வேண்டும்.

ii. விருப்பு தெரிவிக்கப்பட்ட எந்தவொரு பாடசாலையிலும் அதிபர் பதவிக்கு நியமனம் பெற்றால் ஏற்றுக்கொள்ள கூடிய காரணங்களின்றி அப்பதவியின் கடமை பொறுப்பேற்றலை நிராகரிக்க முடியாது

03. **விண்ணப்பங்களை முன்னிலைப்படுத்தும் முறை**

i. விண்ணப்பதாரர்களினால் இத்துடன் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கிணைவாக A4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து பதிவுத்தபாலில் மாத்திரம் பின்வரும் முகவரிக்கு 2023.04.28 தினத்தன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“தேசிய பாடசாலை அதிபர் பதவி - இ.க.நி.சே I ”** என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் **“உதவிச் செயலாளர், கல்விச் சேவை தாபனக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய**, பத்தரமுல்ல’’ என்ற முகவரிக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

ii. உங்களால் அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட $2x2^{1}/_{2}$ அங்குல வண்ண புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்தின் வலது பக்க மேல் மூலையில் ஒட்டப்பட்டு அனுப்ப வேண்டும்.

04. **முறைமை**

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு அதிபர்களாக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட மாட்டார்கள் என்பதுடன், வெற்றிடங்கள் நிலவும் பாடசாலை எண்ணிக்கைக்கமைய உத்தியோகத்தர்களை அதிபர்களாக நியமிப்பதற்கு தெரிவுசெய்யப்படுவார்கள்.
எவ்வாறாயினும் விண்ணப்பங்களை முன்னிலைப்படுத்தும்போது விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப பாடசாலைகளை பெயரிடப்பட முடியும் என்பதுடன், அதிபர் பதவிக்கு நியமிக்கப்படும்போது அந்த விருப்பையும் கருத்திற் கொள்ளப்படும்.
பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு அதிபர்கள் தெரிவுசெய்யப்பட மாட்டார்கள் என்பதுடன், வெற்றிடங்கள் நிலவும் பாடசாலை எண்ணிக்கைகளுக்கு சமமான உத்தியோகத்தர்கள் அதிபர்களாக நியமிப்பதற்கு தெரிவுசெய்யப்படுவார்கள்.
அதன் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் அனுமதிக்கப்பட்ட இத்துடன் காட்டப்பட்டுள்ள புள்ளி நடைமுறைகளுக்கமைவாக, அந்த குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகத்தேர்வு சபையினால் வழங்கப்படும் புள்ளிகள், விண்ணப்பதாரரின் விருப்பு, விண்ணப்பதாரர் தொடர்பாக நிலவிய/நிலவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் கருத்திற்கொள்ள வேண்டிய இதர விடயங்களையும் கருத்திற்கோண்டு கல்விச் செயலாளரினால் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் அதிபர் பதவிகளுக்கு நியமிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் கட்டளைப்படி,



**எம்.என். ரணசிங்க**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**

2023.04.11